# Certificate of Appreciation

This is to certify that

Dr. S.M. Alagappan

has attended and presented a paper on the title

Sanga Illakkiyam Kaatum Vanigam

in the

**INTERNATIONAL CONFERENCE ON**
**DEPICTION OF RELIGION AND HUMAN SOCIETY IN TAMIL LITERATURE**

organized by

Kongunadu Arts and Science College, Coimbatore, Tamilnadu, India
Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia
Thirupputhur Thiruneri Thirumandram, Thirupputhur
Colombo Tamil Sangam, Sri Lanka
Sydney Tamil Valarchi Mandram, Australia
Na. Subbureddiyar 100 Educational Trust, Chennai
New Century Book House, Chennai
Dr. M. Aruchami Research Foundation, Coimbatore, Tamilnadu

held on

5th December 2018

at

Kongunadu Arts and Science College
Coimbatore, Tamilnadu

**Dr. K. MURUGESAN**
Convener & Head
Department of Tamil
Kongunadu Arts and Science College
Coimbatore

**Dr. M. CHITHAMBARAM**
Associate Prof. in Tamil
Conference Co-ordinator
Thirupputhur Thiruneri Thirumandram

**Professor Dr. S. KUMARAN**
Conference Co-ordinator
Department of Indian Studies
Faculty of Arts & Social Sciences
University of Malaya
Kuala Lumpur, Malaysia

**Dr. C. A. VASUKI**
Secretary & Director
Kongunadu Arts and Science College
Coimbatore


**Dr. S. CHANDRIKA**
Conference Co-ordinator
Sydney Tamil Valarchi Mandram, Australia

**Dr. S. RAMALINGAM**
Founder
Na. Subbureddiyar 100 Educational Trust
Chennai

**Mr. S. SARAVANAN**
Managing Director
New Century Book House
Chennai

# தமிழ் இலக்கியங்களில் சமயமும் சமூகமும்

## தொகுதி – II



பதிப்பாசிரியர்கள்
முனைவர் க. முருகேசன்
முனைவர் மா. சிதம்பரம்
முனைவர் சு. குமரன்
முனைவர் சு. இராமலிங்கம்
திரு. கி. பொன்னுதுரை

# தமிழ் இலக்கியங்களில் சமயமும் சமூகமும்

(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)


| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | **முனைவர் க. முருகேசன்**<br>**முனைவர் மா. சிதம்பரம்**<br>**முனைவர் சு. குமரன்**<br>**முனைவர் சு. இராமலிங்கம்**<br>**திரு. கி. பொன்னுதுரை** |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | நவம்பர், 2018 |
| வெளியீடு | : | **தமிழ்த்துறை**<br>**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**<br>கோயம்புத்தூர் - 641029. |
| கணினி | : | பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் - 29. |
| அச்சாக்கம் | : | பிரடாக் பிரிண்ட்,<br>476, பூமாதேவி கோவில் அருகில்<br>கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)<br>கோயம்புத்தூர் - 29.<br>அலைபேசி : 9843273994, 7358863327 |
| பக்கங்கள் | : | XVIII + 488 = 506 |
| விலை | : | உரூ. 400/- |

**ISBN : 978 - 93 - 80800 - 90 - 5**


# International Conference on Depiction of Religion and Human Society in Tamil Literature


| | | |
|---|---|---|
| Editor's | : | **Dr. K. Murugesan. Dr. M. Chidambaram**<br>**Dr. S. Kumaran. Dr. S. Ramalingam**<br>**Mr. K. Ponnudhurai** |
| Copyright's | : | Editors |
| First Edition | : | November, 2018 |
| Published | : | **Department of Tamil**<br>**Kongunadu Arts and Science College**<br>Coimbatore - 641 029. |
| Computer | : | **Prdag Print**, Coimbatore - 29. |
| Printing at | : | **Prdag Print**<br>476, Near Boomadevi Kovil<br>G.N. Mills (Po), Coimbatore - 29.<br>Cell : 98432 73994, 91505 91017 |
| Pages | : | XVIII + 488 = 506 |
| Prize | : | **Rs. 400/-** |

103. ஸ்ரீகந்தராசா மதுராங்கி
திருக்கோயில் வழிபாட்டில் மங்கல இசைமரபு 506

104. S. Kumaran
ASPECTS OF SOCIOLOGY OF RELIGION OF THE TAMILS IN CLASSICAL TAMIL LITERATURE 513

105. முனைவர் எம்.எஸ். ஸ்ரீலக்ஷ்மி
சேந்தனார் காதலில் மரபும் மரபு மீறலும் 522

106. இ. மனோஜா
சித்தர்பாடல்களில் வெளிப்பட்டு நிற்கும் சமூக மேம்பாட்டுச் சிந்தனைகள் 528

107. மதிவாணி குகநாதன்
ஈழத்து சைவ, தமிழ் சமூக வளர்ச்சியில் தங்கம்மா அப்பாக்குட்டியின் பங்கு 536

108. Dr. Midhun K S
DISCUSSING THE CONNECTIONS BETWEEN THE SOCIAL COMMUNITIES OF CHERA AND KERALA 545

109. முனைவர் சௌ.பா. சாலாவாணி ஸ்ரீ
நிகழ்த்து கலையில் இறையும் சமூகமும் 549

110. ந. சஞ்ஜீவன்
இசையும் இந்து மதமும் 555

111. முனைவர் இ. சேனாவரையன்
வேலராமமூர்த்தி சிறுகதைகளில் இருத்தலியல் கூறுகள் 561

112. கலாநிதி சண்முகசர்மா ஜெயப்பிரகாஷ்
இலங்கை தமிழ் நாடகப் பாரம்பரியம் 568

113. சிவகுமாரி சாமியப்பன்
பெரியபுராணம் காட்டும் பண்பாடு 576

114. முனைவர் வே. வளர்மதி
திருமந்திரத்தில் சிவபெருமானின் செயலும் அருளும் 583

115. திருமதி வானதி பகீரதன்
பரிபாடல் கூறும் முருக வழிபாட்டில் திருப்பரங்குன்றத்து விழா 590

116. முனைவர் இரா. விஜயராணி
தமிழ் இலக்கியத்தில் நெய்தல் சமூகம் 597

117. முனைவர் சொ.மெ. அழகப்பன்
சங்க இலக்கியம் காட்டும் வணிகம் 604

118. முனைவர் மு. பாலசுப்ரமணியன்
கவியரசு கண்ணதாசனின் சமூகச் சமத்துவக் கோட்பாடு 611

# 117. சங்க இலக்கியம் காட்டும் வணிகம்

முனைவர் சொ.மெ. அழகப்பன்
இணைப்பேராசிரியர் வணிகவியல் துறை
ஆறுமுகம் பிள்ளை சீதை அம்மாள் கல்லூரி
திருப்பத்தூர் - 630211.

## முன்னுரை

மனிதனுடைய தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றுவது வணிகம். அது இலாப நோக்கு உள்ளதாகவும் இருக்கலாம். இலாப நோக்கு அற்றதாகவும் இருக்கலாம். இவ்வகைப் பொருளாதார நடவடிக்கையே வணிகம் எனப்படும். பழந்தமிழ் நாட்டில் வாணிகம் வளர்ந்திருந்தது. அறத்தின் வழியே வாணிகம் செய்தார்கள். பொருள் தேடுவது ஒன்றையே குறிக்கோளாய்க் கொள்ளாதவர்கள். பல இடங்களில் விளையும் பலவகைப் பண்டங்களை ஓரிடத்திற் கொண்டு வந்து குவித்து, அப்பண்டங்கள் கிடைக்காத வேறிடங்களுக்கு அவற்றை அனுப்பி, நாடு முழுவதும் வறுமையின்றி நலமாக இருக்க அவர்கள் வழி தேடினார்கள். இதனடிப்படையில் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பண்டமாற்று வணிக முறை, ஏற்றுமதி-இறக்குமதி வணிகம், வரிவிதிப்பு முறை, கடல் வணிகம் போன்ற வணிகக் கூறுகளை ஆராயும் விதமாக இந்த ஆய்வு அமைக்கப்பட்டுள்ளது.

## பண்டமாற்று வணிக முறை

கரும்புச் சக்கையை கொள்முதல் செய்ய தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் தனித்தன்மை கொண்ட பண்ட மாற்று முறையை தேர்ந்தெடுத்துள்ளது. இந்நிறுவனம் ஐந்து சர்க்கரை ஆலைகளில் நிலக்கரி மற்றும் பழுப்பு நிலக்கரி கொண்டு இயக்கப்படும் கொதிகலன்களை இயக்கி, நீராவியைத் தயாரித்து இச்சர்க்கரை ஆலைகளுக்கு அளித்து கரும்புச் சக்கையைப் பெற்று வருகிறது. இம்முறையை அக்காலச் சங்க இலக்கியங்களில் காணலாம்.

சங்க காலத்தில் உள்ளூர் வணிகங்கள் பெரும்பாலும் பண்டமாற்று முறையைப் பின்பற்றி நடைபெற்று வந்திருக்கின்றன. இடையன் பாலைக் கொடுத்து அதற்கு ஈடாகக் குடிக்கக் கூழை மாற்றிக் கொண்டதை முதுகூத்தனார்,

*"பாலொடு வந்து கூழொடு பெயரும் யாடுடை
இடைமகன்" (குறு:221)*

என்ற குறுந்தொகைப் பாடலில் கூறுகிறார்.

வேடன் மான்கறியினை வட்டிலில் கொண்டு வருகிறான். ஆயர்மகள் பானையில் தயிரைக் கொண்டு வருகிறாள். இவற்றைப் பெற்றுக் கொண்டு வட்டிலும் பானையும் நிறையுமாறு நெல்லை முகந்து முகந்து கொடுப்பார்கள்.

*"கான்உறை வாழ்க்கை கதநாய் வேட்டுவன்*
*மான்தசை சொரிந்த வட்டியும் ஆய்மகள்*
*தயிர்கொடு வந்த தசுப்பும் நிறைய*
*ஏரின் வாழ்நர் பேரில் அரிவையர்*
*குளக்கீழ் விளைந்த களக்கொள் வெண்ணெல்*
*முகத்தனர் கொடுப்ப உகந்தனர் பெயரும்" (புற:33)*

சங்க காலத்தில் இறைச்சியையும் தயிரையும் கொடுத்து நெல்லினைப் பண்டமாற்றாகப் பெற்றிருப்பதை மேற்சொன்ன புறநானூற்றுப் பாடலால் அறியலாம்.

வாளை மீனுக்கு விலையாக பாண்மகள் பழமையான நல்ல நெல்லைப் பெற்றுக் கொள்ளாமல், கழங்கு போன்று பெரிய முத்துக்களையும் அணிகலன்களையும் பண்டமாற்று விலையாகப் பெறுவதைக் குறிக்கும் வகையில்

*"...... தன் ஐயர்*
*காலைத் தந்த கணைக் கோட்டு வாளைக்கு.*
*அவ்வாங்கு உந்தி, அம்சொல், பாண்மகள்,*
*நெடுங்கொடி நுடங்கும் நறவு மலி மறுகில்*
*பழஞ்செந் நெல்லின் முகவை கொள்ளாள்*
*கழங்கு உறழ் முத்தமொடு நன்கலம் பெறூஉம்"*
*(அக:126)*

என்ற அடிகளும் மீனுக்குப் பதிலாக வட்டி நிறைய பயறு பெறுவதைக் குறிக்கும் வகையில்

*"முள்ளெயிற்றுப் பாண்மகள் இன்கெடிறு சொரிந்த*
*அதன்பெரு வட்டி நிறைய மனையோள்*
*அரிகால் பெரும்பயறு நிறைக்கும் ஊர" (ஐங்: 47)*

என்ற அடிகளும் பண்டமாற்று முறையைத் தெளிவாகக் காட்டுகின்றன.

## வரிவிதிப்பு முறை

ஒரு குடிமகன் அரசுக்குக் கட்டாயமாக செலுத்திடும் அல்லது செலுத்த வேண்டிய தொகை "வரி" எனப்படும். ஒரு குடிமகன் செலுத்தும் வரியானது பொதுச் சொத்துக்களைப் பராமரிக்கவும் பொது இடத்தில் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்யவும் பயன்படுகிறது. தற்போது வருமானவரி, சொத்துவரி, விற்பனை வரி, கேளிக்கை வரி, சுங்கத் தீர்வை, கலால் வரி, சரக்கு வரி எனப் பல்வகை வரிகள் உள்ளன.

சங்ககாலத்திலும் நிலவரி, தொழில்வரி, சுங்கவரி என்பன வழக்கில் இருந்தன. நிலக்கிழவனே அரசியலின் முதுகெலும்பாகக் கருதப்பட்டான். நிலவரியைப் "புரவுவரி" என்றும் அழைப்பர். மிகுதியான வரி வசூலிப்பதை மன்னர்கள் விரும்புவதில்லை. இதைக் கீழ்வரும் புறப்பாட்டு வரிகளால் அறியலாம்.

*"குடிபுரவு இரக்கும் கூர்இல் ஆண்மைச்*
*சிறியோன் பெறின், அது சிறந்தன்று மன்னே"* (புற:75)

இருப்பினும், நிலவரியானது மக்களுக்குச் செலுத்த முடியாத அளவு கடினமாக இருந்ததை

*"புரவிக்கு ஆற்றாச் சீறூர்"* **(புற:330)**

என்னும் பாடல்அடியால் அறியலாம்.

புறநானூற்றின் 35-ம் பாடல், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை வெள்ளைக்குடி நாகனார், "பழஞ் செய்க்கடன் வீடு கொண்ட"தற்காக பாடிய பாடலாகும். இத்தொடர் நிலவரித் தள்ளுபடியைக் குறிக்கின்றது. இதனால் சங்ககாலத்திலேயே வரித் தள்ளுபடிகள் இருப்பதைக் காணலாம்.

வெளியிலிருந்து நகருக்குள் வரும் பொருள்களுக்கு வரி வாங்கும் வழக்கம் சங்ககாலத்தில் இருந்துள்ளது. "உல்கு" என்பது "சுங்கவரி". உல்கு-வரி வாங்கிய பொருள்களின் மீது முத்திரை பதிப்பர். அவ்வாறு முத்திரையிட்டு மாறாத அளவுக்கு பொருள்கள் குவிந்து கிடந்தன என்பதை பட்டினப்பாலை வரிகளின் மூலம் அறியலாம்.

***"நல் இறைவன் பொருள் காக்கும்***
***தொல் இசைத் தொழில் மாக்கள்,***
***காய் சினத்த கதிர்ச் செல்வன்***
***தேர் பூண்ட மாஅ போல,***
***வைகல்தொறும் அசைவு இன்றி,***
***உல்கு செயக் குறை படாது" (பட்: 120-125)***

இக்கூற்றால் அரசுக்கு வரும் வருமானங்களுள் சுங்கவரியும் ஒன்றாகும் என்பது தெளிவாகின்றது.

நாட்டின் வருவாயான வரியினைத் திருவள்ளுவர்,

***"உறுபொருளும் உல்கு பொருளுந்தன் ஒன்னார்த்***
***தெறுபொருளும் வேந்தன் பொருள்" (குறள்:756)***

என்று குறிப்பிடுகிறார். மிளகு மூட்டைகளை ஏற்றிச் செல்ல உல்குவரி வசூலிக்கப்பட்டதை,

***"கழுதைச் சாத்தொடு வழங்கும்***
***உல்குடைப் பெருவழிக் கவலை காக்கும்"***
***(பெ.ஆ:80-81)***

என்ற அடிகள் உணர்த்துகின்றன.

இவ்வாறு சுங்கவரியும், நிலவரியும் அரசின் முக்கிய வருவாய் மூலங்களாக இருந்தன.

## ஏற்றுமதி - இறக்குமதி வர்த்தகம்

ஏற்றுமதி-இறக்குமதி வர்த்தகம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றது. நாட்டிற்கு அந்நிய செலாவணி ஈட்டித் தருவதில் முக்கியப் பங்கு ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்திற்கு உண்டு. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இருந்துதான் இந்தியா தனக்கு வேண்டிய பொருட்களில் பெரும்பாலானவற்றை இறக்குமதி செய்கிறது. இந்தியாவில் இருந்து பெட்ரோலியப் பொருட்கள், தங்க நகைகள், ஆட்டோமொபைல் உதிரிப்பாகங்கள், வாகனங்கள், அதிகத் திறன்வாய்ந்த இயந்திரங்கள், தானியங்கள் மற்றும் ஜவுளிப் பொருட்கள் போன்றவற்றை ஏற்றுமதி செய்கிறது.

உற்பத்தியைப் பெருக்கி நாட்டின் ஏற்றுமதியை உயர்த்தக் கூடிய வணிகவியலாரின் கருத்தினையே வள்ளுவமும் கூறுகிறது.

*"செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்*
*எஃகதனிற் கூறியது இல்"* **(குறள்:759)**

பண்டைக் காலத்து வாணிகப் பொருள்கள் துறைமுக நகரங்களிலிருந்து ஏற்றுமதியாயின. பட்டினப்பாலையும் மதுரைக்காஞ்சியும் அவற்றை அழகுறக் கூறும். காவிரிப்பூம்பட்டினத் துறைமுகத்தில் பொருள்கள் மண்டியும் மயங்கியும் கிடந்ததனைப் பின்வரும் பட்டினப்பாலை வரிகள் விளக்கும்.

**"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்**
**காலின் வந்த கருங்கறி மூடையும்**
**வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்**
**குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்**
**தென்கடல் முத்துங் குணகடல் துகிரும்**
**கங்கை வாரியும் காவிரிப் பயனும்**
**ஈழத் துணவும் காழகத் தாக்கமும்**
**அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி**
**வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகி"** **(பட்:185-192)**

கிறித்து பிறப்பதற்கு முன்பே கிரேக்கம், உரோமாபுரி, எகிப்து ஆகிய நாடுகளுக்கு அரிசியும், மயில்தோகையும், சந்தனமும் தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்டன. கி.மு.பத்தாம் நூற்றாண்டில் அரசன் சாலமனுக்கு யானைத் தந்தமும், மயில்தோகையும், வாசனைப் பொருள்களும் தமிழகத்தில் இருந்து அனுப்பப்பட்டன. கிரேக்கம், ரோமாபுரி ஆகிய நாடுகளிலிருந்து தமிழகத்திற்கு வந்த வணிகர்களை "யவனர்கள்" என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

முசிறி என்னும் சேரநாட்டுத் துறைமுகப்பட்டினத்தில், யவனர்கள் மரக்கலங்களில் பொன்னை வந்து இறக்குமதி செய்து, அதற்கு

விலையாக மிளகு மூட்டைகளை ஏற்றிச் செல்வதாக அகநானூறு குறிப்பிடுகின்றது.

*"யவனர் தந்த வினைமாண் நன்கலம்*
*பொன்னொடு வந்து கறியொடு பெயரும்*
*வளங்கெழு முசிறி"* **(அக:149)**

யவனர்கள் மரக்கலங்களில் கொண்டு வந்து இறக்குமதி செய்த மதுவை பருகிய மாறன் என்னும் பாண்டிய மன்னன் களிப்புடன் இருந்தான் எனப் புறநானூறு கூறுகின்றது.

*"யவனர் நன்கலம்தந்த தண்கமழ் தேறல்*
*பொன்செய் புனைகலத்து ஏந்தி நாளும்*
*ஒண்தொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்து*
*ஆங்குஇனிது ஒழுகுமதி ஓங்குவாள் மாற"*
**(புற:56)**

பெரிய மரக்கலங்களில் தமிழகத்தில் பொன் மிகுதற்குக் காரணமாகிய சிறந்த பண்டங்களை ஏற்றிக் கொண்டு வந்ததை மதுரைக் காஞ்சியின் பாடல் வரிகளில் காணலாம்.

*"பொன் மலிந்த விழுப் பண்டம்*
*நா டார நன் கிழிதரும்*
*ஆடி யற் பெரு நாவாய்"* **(ம.கா:81-83)**

சோழநாட்டில் காவிரிப்பூம்பட்டினம், சேரநாட்டில் முசிறியும், பாண்டிய நாட்டில் கொற்கையும் சங்க காலத்தில் புகழ்மிக்க துறைமுகப்பட்டினங்களாகத் திகழ்ந்தன. கப்பலிலிருந்து இறக்குமதி ஆகும் பொருட்களுக்கு அந்நாட்டின் சின்னம் பொறிக்கப்பட்டது. அப்படி இறக்குமதியாகும் பொருள் குவியலைப் பட்டினப்பாலை

*"நீரின் இன்றும் நிலத்து ஏற்றவும்*
*நிலத்தினின்று நீர்ப் பரப்பவும்*
*அளந்து அறியாப் பல பண்டம்*
*வரம்பு அறியாமை வந்து ஈண்டி*
*அருங்கடிப் பெருங்காப்பின்*
*வலியுடை வல் அணங்கின் நோன்*
*புலி பொறித்து புறம்போக்கி*
*முதிநிறைந்த மலிபண்டம்"* **(பட்:129-136)**

என விளக்குகிறது. புலி முத்திரையிடப்பட்ட பண்டங்கள் தான் வெளியே போக முடியும். இது அவர்களின் வணிகமேலாண்மையைக் காட்டுகின்றது.

வெளிநாட்டிலிருந்து குதிரைகள் இங்கு வந்தது பற்றி பெரும்பாணாற்றுப்படையும் பட்டினப்பாலையும் கூறுகின்றன. காவிரித் துறையில் அகிலும் ஆரமும் வந்து குவிந்தன என்று பொருநராற்றுப்படை குறிக்கின்றது.

*"நறையும் நரந்தமும் அகிலும் ஆரமும்*
*துறைதுறை தோறும் பொறையுயிர்த் தொழுகி"*
*(பொ.ஆ: 238-239)*

முத்து வாணிகம் தமிழகத்தின் முக்கியத் தொழிலாக விளங்கியது. முத்து வாணிகம் வாயிலாகவே கிரேக்கர்கள் தென்னிந்தியாவை அறியலானார்கள். உரோம் நகரத்து மகளிர் தமிழகத்தின் முத்துக்களைப் பெரிதும் விரும்பினர். கொற்கை முத்துக்கள் விளையும் சிறந்த நகரமாக விளங்கியது என்பதை கீழ்வரும் நற்றிணை வரிகளால் அறியலாம்.

*"முத்துப்படு பரப்பின் கொற்கை முன்றுரை" (நற்:23)*

## கடல் வாணிகம்

பொன்னும், மணியும், முத்தும், துகிலும் கொண்டு கடல்கடந்து வாணிகம் செய்தனர். பண்டைத் தமிழகத்தில் துறைமுகப் பட்டினங்கள் பலவிருந்தன. பூம்புகார் முதலான பெருநகரங்கள், வணிகர் வாழும் இடங்களாய் இருந்தன. தமிழர்களுக்குச் சாவக நாட்டுடனும் கடல் வாணிகத்தொடர்பு இருந்தது.

"திரை கடலோடியும் திரவியம் தேடு" என்கிற மொழிக்கேற்ப நமது முன்னோர்கள் கடல் கடந்து வணிகம் செய்த செய்திகள் பண்டைய இலக்கியங்களில் நிறையவே காணக் கிடைக்கின்றன.

சங்க காலத்தில் வாழ்ந்த தமிழர்கள் அயல்நாட்டினரோடு கொண்டிருந்த தொடர்பை பட்டினப்பாலை தெளிவாக எடுத்துரைக்கின்றது.

*"பல்லாயமொடு பதிபழகி*
*வேறுவே றுயர்ந்த முதுவா யக்கற்*
*சாறயர் மூதூர் சென்றுதொக் காங்க*
*மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்*
*புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்*
*முட்டாச் சிறப்பிற் பட்டினம் (பட்: 213-218)*

அயல்நாட்டு வாணிகம் பெரும்பாலும் கடல் சார்ந்ததாகவே இருந்தது. கடலுக்கும் சங்ககாலத் தமிழருக்குமான உறவு நெருக்கமானது. சங்க இலக்கியங்களில் கடல் குறித்தும் மரக்கலம் குறித்தும் பல சொற்கள் வழங்கி வந்திருக்கின்றன. கடல் போக்குவரத்திற்காக ஓடம், பரிசல், புனை, தோணி, அம்பி, திமில், படகு, கப்பல், நாவாய் முதலிய கலங்கள் பயன்படுத்தப்பட்டதற்கு சான்றுகள் உள்ளன. கடல் வாணிகத்தை ஊக்குவித்த கரிகாற்சோழனைப் புறநானூறு பாடுகின்றது.

*"நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி*
*வளிதொழில் ஆண்ட வரவோன் மருக" (புற:66)*

துறைமுகங்களில் பல்வேறு நாட்டுக் கப்பல்கள் இளைப்பாறுகின்ற செய்தியை நற்றிணை அறிவிக்கின்றது.

*"வேறுபல நாட்டுக் கால்தர வந்த*
*பலவினை நாவாய் தோன்றும் பெருந்துறை"* (நற்:295)

கடலில் நிற்கும் பெரிய கலங்களிலிருந்து பொருட்களை ஏற்றிக்கொண்டு கழிகள் மூலமாகக் கரைசேர்க்கும் தொழிலில் தோணிகள் பயன்படுத்தப்பட்டன என்பதை கீழ்வரும் புறநானூற்றுப் பாடல் வரிகளால் அறியலாம்.

*"கலம் தந்த பொற் பரிசம்*
*கழித்தோணியான், கரை சேர்க்குந்து"* (புற:343)

அம்பி என்பது மீன்பிடிக்கும் தொழிலுக்காகப் பயன்படுத்தப்பட்டதாகும். இதனை

*".... பரதவர்*
*வைகுகடல் அம்பியின் தோன்றும்*
*மைபடு மாமலை விலங்கிய சுரனே"* (புற:187)

என்னும் புறநானூற்றுப் பாடல் வரிகளால் அறியலாம்.

கடற்கரை ஓரமாகச் சென்று பக்கத்து ஊர்களோடு வணிகம் செய்யப் பயன்படும் பறிகள் காவிரிப்பூம்பட்டினக் கழிகளில் கரையோரமாகக் கட்டப்பட்டிருந்தன என்று பட்டினப்பாலை கூறுகிறது.

*"வெள்ளையுப்பின் கொள்ளை சாற்றி*
*நெல்லொடு வந்த வல்லாய்ப் ப:றி*
*பணைநிலைப் புரவியின் அணைமுதற் பிணிக்கும்*
*கழிசூழ் படப்பை"* (பட்:29-32)

## வணிகச் சந்தைகள்

கடற்கரையிலே வந்திறங்கினாலும் அவற்றின் மதிப்பு விலைபொருளாகும் போது தான் முழுமை பெறுகிறது என்பதைக் கருத்திற்கொண்டு வணிகச் சந்தைகள் அமைக்கப்பட்டன. சங்க காலத்திலும் மதுரை தூங்கா நகராய் விளங்கியதை மருதனார் மூலம் அறியமுடிகிறது. பகல் நேரங்களில் திறக்கப்படும் கடைகள் நாளங்காடி இரவு நேரக் கடைகள் அல்லங்காடி எனப்பட்டன.

## முடிவுரை

வாணிகம் என்பதன் நோக்கமே பல்நோக்குச் சிந்தனையுடன் செயல்பட்டு, தேவையைப் பூர்த்தி செய்வதுடன் உறவு மேம்பாட்டுக்கும் வழிவகுப்பதாகும். சங்கத் தமிழர்கள் தாம் கொள்முதல் செய்யும் பொருளைத் தாம் கொடுக்கும் பொருளுக்கு மேலாக மாற்றிக் கொள்வதில்லை. தாம் விற்கும் பொருளையும் வாங்குகின்ற பொருளுக்கக் குறைவாகக் கொடுத்தலும் இல்லை. வணிகத்தில் "நாணயம்" மிகுந்திருந்ததைக் காண முடிகின்றது. மேற்கூறிய சான்றுகளின் மூலம் சங்க இலக்கியங்கள் மூலம தமிழகத்தில் உள்நாட்டு வணிகமும் கடல் வணிகமும் சிறந்திருந்தமையைக் காணமுடிகிறது.